
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மனிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 10.08.2024 சனிக்கிழமை | இதழ் : 223 | பக்கங்கள் : 12

# எம்.பி., அமைச்சு பதவிகளை இழக்கவுள்ள ஹரின், மனுஷ!

## ஐக்கிய மக்கள் சக்தி நீக்கியது சரியானதே உயர்நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 10


**சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் என உயர்நீதிமன்றம் நேற்று முக்கிய தீர்ப்பொன்றை அளித்துள்ளது.**



விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வில், மனுதாரர்கள் இருவரையும் கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டப்படி செல்லுபடியாகும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக, ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நீக்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்புரிமையையும் அமைச்சுப் பதவிகளையும் இழக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது... (படம் : ஐ.சிவசாந்தன்)

# சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியமை எதற்கு?

## காரணத்தை வெளியிட்டார் ரணில்

கொழும்பு, ஓக. 10

மக்களின் பசி தீர்க்கவே ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேறுபாடின்றி, சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற "பெண்கள் எங்கள் பலம்" என்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

11

# பதவியை துறப்பது பெரிய விடயமல்ல!

## ஹரின் பெர்னாண்டோ கருத்து

கொழும்பு, ஓக. 10

விட்டுக்கொடுப்பதில் தேர்ச்சி பெற்ற எமக்கு அமைச்சுப் பதவிகளைத் துறப்பது பெரிய விடயமல்ல என தெரிவித்த சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, நான்கு அமைச்சுகளின் பணிகளை சிறப்பாக செய்திருந்தேன் என்றும் கூறினார்.

11

# மனுஷவின் இடத்துக்கு லால் பண்டாரிகொட!

கொழும்பு, ஓக. 10

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய வெற்றிடமாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பந்துல லால் பண்டாரிகொடவின் பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்ய எதிர்பார்த்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

வெற்றிடமாகியுள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் கட்சியின் உயர் பீடம் கூடி கலந்துரையாடல்களை

11

# பிரதமருக்கு எதிராக பவ்ரல் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 10

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கதிர்காமம் கிரிவெஹரையில் இந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூசை வழிபாடுகள் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு அளித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு

11

# மோட்டார் சைக்கிள்கள் மோதி ஆனையிறவில் கோர விபத்து!

## ஒருவர் சாவு! மூவர் படுகாயம்!!

கிளிநொச்சி, ஓக. 10

கிளிநொச்சி - ஆனையிறவு பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நான்கு பேருடன் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஆனையிறவு பகுதியில் ஒன்றன்பின்

11

# புலிகளை ஒழித்ததுபோல் ஊழலையும் ஒழிப்பேன்!

## சரத் பொன்சேகா சபதம்

கொழும்பு, ஓக. 10

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தது போல, தான் ஆட்சிக்கு வந்தால் நாட்டிலிருந்து இலஞ்சம், மற்றும் ஊழலையும் முற்றாக ஒழிப்பேன்" என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள பீல்ட் மார்ஷல் சரத்

11

# அரசியல் பழிவாங்கல் விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதை இரத்து செய்க!

## உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஓக. 10

அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை ரத்து செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் அதன் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட சிலருக்கு எதிராக தொடர்புடைய ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ரத்து செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விடயம்

11

# கடைசி நேரத்தில் நாமல் பின்வாங்கல்?

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதித் தேர்தல் சமரிலிருந்து நாமல் ராஜபக்ஷ கடைசி நேரத்தில் பின்வாங்கக்கூடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகளுடன் பேரம் பேசுவதற்காகவே நாமல் ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

நேற்று இந்தப் பத்தியில் ஊடகவியலாளர்களாக இருந்து அரசியலுக்கு வந்த ஜோசப் பரராஜசிங்கம், அரியநேத்திரன் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதனைப் படித்துவிட்டு ஒரு வாசகர், விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் ஊடகவியலாளராக இருந்து அரசியலுக்கு வந்தவர்தானே. அவரை மறந்துவிட்டதேன்? என்று கேள்வி எழுப்பியிருந்தார். நியாயமான கேள்விதான். அது இந்த ஊர்க்குருவியின் தவறுதான்.

ஒரு கிராமத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றுக்கு அந்த ஊரில் இருந்த செல்வந்தர் ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்திருந்தார்களாம்.

போட்டி முடிந்து, பரிசளிப்பு வைபவத்தின்போது, அவரைப் பேசுவதற்கு அழைத்தார்கள்.

அவரும் மைக்கை எல்லாம் தட்டி, சத்தம் வருகிறதா என்றெல்லாம் பரீட்சித்து விட்டு பேசத் தொடங்கினார்.

"போட்டியை இவ்வளவு நேரமும் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு பக்கம் பதினொரு பேர், இன்னனொரு பக்கம் பதினோரு பேர் நின்று ஒரு பந்தை மட்டும் வைத்து அடிப்பதற்காக ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது செலவில் இருபத்தி இரண்டு பந்துகளை வாங்கிக் கொடுக்கவிருக்கின்றேன். பாவம் அவர்கள் இருபத்தி இரண்டு பந்துகளை வாங்குவதற்கு வசதியில்லாததால்தான் ஒரு பந்தை அடித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றாராம்.

ஒரு வைபவம் என்றால் அந்த வைபவத்தைப் பற்றி அறிந்தவர்களைத்தான் அந்த வைபவங்களுக்கு விருந்தினர்களாக அழைக்கவேண்டும்.

இந்த சம்பவம்தான் எனக்கு அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில் தமிழ் மக்கள் தமக்கு தனியான பிரதேச செயலகத்துக்காக பல வருடங்களாக போராடிக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில், கல்முனையைச் சேர்ந்தவரும் அந்த மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியுமான ஹரிஸ் அதுபற்றி ஒரு பகிரங்கக்கூட்டத்தில் பேசியிருந்தார். சம்பந்தன், சுமந்திரன், மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பலர் கல்முனையில் தமிழ் பிரதேச செயலகத்துக்காக முயன்றுகொண்டிருக்க, நான் தனி ஆளாக நின்று அதனைத் தடுத்து வருகிறேன் என்று வீரவசனம் பேசியிருக்கிறார். உண்மைதான், அது அவரின் தனிப்பட்ட திறமைக்கு சான்றுதான்.

அவரின் இந்த பேச்சைக் கேட்டபோதுதான் எனக்கு மேலே சொன்ன உதைபந்தாட்டப் போட்டி பற்றிய கதை ஞாபகம் வந்தது. அதுமட்டுமல்ல, தனி ஆளாக நின்று ஹரிஸ் விளையாடிக் கொண்டிருப்பது போல ஒரு மைதானமும் கற்பனையில் வந்துபோனது.

அந்த மைதானத்தில் பதினாறு கூட்டமைப்பு எம். பிக்கள் விளையாடிக் கொண்டிருக்க, எதிரணியில் ஏழு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். உதைபந்தாட்டம் என்றால், ஒருவர் தன்னிடமிருக்கும் பந்தை தன்னால் முடிந்தவரை எடுத்துச் சென்று, தனது அணியிலுள்ள மற்றவரிடம் தட்டிக்கொடுக்கவேண்டும். கோல் கம்பங்களுக்கு அருகே எடுத்துச் சென்றாலும் தன்னால் கோல் அடிக்க முடியுமா என்பதை பார்த்து கோல் கம்பத்துக்கு அருகில் நிற்கும் தனது அணியின் மற்றறைய வீரரிடம் தட்டிக் கொடுக்கவேண்டும். ஆனால், நமது எம். பிக்களோ தாங்களே அடித்துவிட வேண்டும் என்பதற்காக பந்தை எடுத்துச் செல்வதும் எதிரணியில் இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ்காரரிடம் பந்தைக் கொடுத்துவிட்டு பல்லிளித்து நிற்பார்கள். அதிலும் ஒருவர் தன்னையே ரொனால்டோ என்று நினைத்துக் கொண்டு, சிலவேளைகளில் சேம் சைற் கோல் அடித்துக்கொண்டிருந்தார். முஸ்லிம் காங்கிரஸின் கோல் காப்பாளரான ஹரீஸூக்கு வேலையே இருக்கவில்லை. பந்து அவரது கோல் கம்பத்தின் பக்கம் வரவே இல்லையே.

அவர்கள் பந்தையே அடிக்காதபோதுதான், ஹரீஸ் தானே கோல் போகாமல் தடுத்தேன் என்கிறார்.

சரி இனி இன்று எழுதவந்த விடயத்திற்கு வருவோம்.

இதுவரை நாட்களாக "ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டுகிறார்கள்" என்றும், "முட்டாள்தனமான வேலை" என்றும் இன்னும் பல்வேறு வகையிலும் பலரின் விமர்சனத்திற்குரியதாக இருந்துவந்த தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்தில் அடுத்த கட்ட நகர்வு தயாராகிவிட்டது. ராஜபக்ஷக்களை விழுத்துவதற்காக அவர்களது அணியிலிருந்தே ஒருவரை தமது பக்கம் எடுத்து, மைத்திரியை வேட்பாளராக்கியதுபோல, தமிழ் அரசின் முக்கிய தலைவர் ஒருவரே இப்போது வேட்பாளராகியிருக்கின்றார். வேட்பாளராக அறிவிக்கப்பட்டபின்னர், அரியநேத்திரன் விடுத்த அறிவிப்பு நாம் அனைவரும் கவனிக்கவேண்டியது.

"தமிழ்த் தேசியத்துக்கான குறியீடாகவே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன் - நான் வெறும் அடையாளம் மட்டுமே. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக நான் தேர்தலில் போட்டியிடவில்லை" என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்க வேண்டியது.

தங்களையும் தமிழ்த் தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டு, தெற்குக்கு சேவகம் செய்பவர்களுக்கு, இது கசப்பானதுதான்.

தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது முட்டாள்தனமானது என்றும் தெற்கில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றபோது, அவர்களுடன் பேரம்பேசி அதிகூடிய பலனை பெறலாம் எனவும் கூறியவர்கள், இப்போது மாகாண சபைகளுக்கு பழைய முறையில் தேர்தல் நடத்திக் காட்டுகின்றோம் என்றும் அதற்கு உதவுகின்றவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கோருவதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்த நேரத்தில் அரியநேத்திரன் கேட்டிருக்கும் மற்றுமொரு கேள்வியையும் அவர்கள் கவனிக்க வேண்டும்.

"2005 இலேயே ரணிலை பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் கூறியிருந்தார்கள். பல காலமாக எம்மை ஏமாற்றி வரும் ரணிலுக்கு வாக்களிக்கப்போகின்றோமா...?


சஜித் பிரேமதாஸ என்ன செய்தார்? புத்த சாசன அமைச்சராக இருந்து ஆயிரம் பௌத்த விகாரைகளை வடக்கு, கிழக்கில் அமைப்பதற்கு அங்கீகாரம் கொண்டு வந்தார். இன்றுவரை அந்த செயல்பாடு தொடர்கிறது அவ்வாறானவருக்கு வாக்களிக்க வேண்டுமா?


அநுர குமார திஸநாயக்க இணைந்த வடக்கு - கிழக்கை பிரிக்கத் துணையாக இருந்தார் - வன்னி இறுதிப் போரின் போது அவரும் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கியவரே. அடுத்த வேட்பாளர், நாமல் ராஜபக்ஷ. மகிந்தவின் புதல்வர். 13ஐயே தரமாட்டேன் என்று கூறும் இனவாதி. இவர்களுக்கா நாம் வாக்களிப்பது?"


இந்தக் கேள்விகளுக்கு தமிழ் பொது வேட்பாளர் தேவையில்லை என்பவர்கள் என்ன பதிலைச் சொல்லப்போகிறார்கள் என்பதையே தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்று வேட்பாளர்களுடன் பேரம் பேசி, அதிகூடிய நன்மைகளைப் பெறலாம் என்றவர், இப்போது மாகாண சபைகளுக்கு பழைய முறையில் தேர்தலை நடத்திக்காட்டுகின்றேன் என்று களம் இறங்கியிருக்கிறார். அதிகம் ஏன், கல்முனை பிரதேச செயலகத்தை உடனே ஏற்படுத்துவதற்கு முடிந்தால் அதனைச் செய்துகாட்டலாம். அதனை செய்வோம் என்று ஒரு வேட்பாளரை பகிரங்கமாக அறிவிக்க செய்தாலே இவர்களைப் பொறுத்தவரை பெரிய சாதனைதான்.!


ஊர்க்குருவி.











வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(படங்கள் : ஐ.சிவசாந்தன்)

## பொலித்தீனில் மறைத்து வைக்கப்பட்ட ரூ. 20 கோடி பெறுமதியான தங்கம் மீட்பு

கொழும்பு, ஒக. 10

கற்பிட்டி தோரடி குளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி கடற்படை அதிகாரிகள் மேற்கொண்ட விசேட தேடுதலின் போதே இத்தங்கத்தை கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

4 கிலோ 740 கிராம் நிறையுடைய இந்த தங்கம் சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதாகவும் கடற்படையினரின் தேடுதலின் காரணமாக பின்னர் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தடாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுவதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

குறித்த தங்கம் பொலித்தீன் பைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு தடாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது.

(அ)

## மெய்வன்மை விழா

யாழ்ப்பாணம், ஒக. 10

கொக்குவில் - பொற்பதி சரஸ்வதி முன்பள்ளியின் 39ஆவது மெய்வன்மை விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

சண். வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லண்டனை சேர்ந்த விரிவுரையாளர் சுரேன் புராதனி தம்பதியர் பங்கேற்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக நோர்வேயை சேர்ந்த பொறியியலாளர் சிவனேஸ்வரன் நவதீஸ்வரி தம்பதியர், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ச. சுரேஷ்குமார், யாழ். பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் சிந்து [illegible] ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ)

## உள்நாட்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஒக. 10

இரண்டு உள் நாட்டுத் துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், மஹியங்கனை மற்றும் ரிதிமாலியயெத்த பொலிஸ் நிலையங்களில் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியகோபல, குருமட பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரும், மஹியங்கனை, தம்பனை, வட்டுயாவைச் சேர்ந்த 41 வயதான ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த, பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

மேலும், இரு சந்தேக நபர்களையும் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.08.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆடி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சி என்ன செய்யப் போகின்றது?

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமிழ் பொது வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை தமிழ் அரசு கட்சி குழப்பமடைந்திருக்கின்றது. தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவரையே, தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு, வேட்பாளராக களமிறக்கியிருக்கின்றது. தமிழ் அரசு கட்சியை சேர்ந்த ஒருவரை இந்தக் களத்தில் தமிழ் அரசு கட்சியினர் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் - ஏனெனில், தமிழ் அரசு கட்சியின் ஓர் அணிக்கு தலைமை தாங்கிவரும் எம்.ஏ.சுமந்திரன், பொது வெளிகளில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்து வருகின்றார். தமிழ் அரசு கட்சி உத்தியோகபூர்வமான முடிவை அறிவிக்காத நிலையில் சுமந்திரன் எவ்வாறு, கட்சியின் முடிவுக்கு மாறாக செயல்பட முடியுமென்னும் கேள்வியுண்டு.

தமிழ் அரசு கட்சியை சேர்ந்த ஒருவர் தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அவரை கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படலாம் என்னும் எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது? அவ்வாறானதொரு முடிவை தமிழ் அரசு கட்சியால் எடுக்க முடியுமா? அவ்வாறனதொரு முடிவை எடுத்தால், அதன் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக தமிழ் அரசு கட்சி தன்னை அடையாளப்படுத்த முடியுமா?

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதால் தமிழ் அரசு கட்சிக்கு என்ன நஷ்டம் ஏற்படப் போகின்றது? தமிழ் மக்கள் தொடர்ந்தும் தென்னிலங்கையால் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றனர் - இவ்வாறானதொரு நிலையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை அதரிப்பதை விடவும் வேறு என்ன சரியான, பொருத்தமான தெரிவு இருக்க முடியும்? வேறு என்ன பொருத்தமான தெரிவு தமிழ் அரசு கட்சியிடம் இருக்கின்றது?

ஒரு வேளை தமிழ் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டிருக்கும் அரியநேத்திரனை கட்சியிலிருந்து விலக்கினால், அதற்கு தமிழ் அரசு கட்சி எவ்வாறான பதிலை வழங்க முடியும்? அரியநேத்திரன் கட்சியின் தீர்மானத்திற்கு முரணாக முடிவெடுத்ததால் - அவரை கட்சியிலிருந்து நீக்குகின்றோம் என்று கூறமுடியுமா - அல்லது, அவர் தமிழ் தேசிய நிலைப்பாட்டை எடுத்ததால், அவரை கட்சியிலிருந்து நீக்கும் முடிவை எடுத்திருக்கின்றோம் என்று கூற முடியுமா - அல்லது, சுமந்திரன் அணியினர் விரும்பவில்லை அதனால் அவரை கட்சியிலிருந்து நீக்குகின்றோம் என்று அறிவிக்க முடியுமா?


தமிழ் அரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள், நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கித் தருவேன் என்று குறிப்பிட்டிருந்தார். அதனடிப்படையிலேயே, அந்தக் கட்சியின் இதுவரைகால பயணம் அமைந்தது. ஒரு தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் என்னும் வகையில், அரியநேத்திரனின் முடிவு, செல்வநாயகத்தின் நோக்கத்திற்கு மாறான ஒன்றல்ல - மாறாக அதனை பின்தொடரும் ஒரு நிலைப்பாடாகும். அவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொண்டிருக்கும் அரியநேத்திரனை கட்சியிலிருந்து விலக்கும் முடிவை ஒரு போதும் எடுக்க முடியாது. ஒரு வேளை எடுத்தால், தமிழ் அரசு கட்சி, அதன் வரலாற்றுப் பாதையிலிருந்து விலகிச் செல்வதாகவே, தமிழ் தேசிய வரலாற்றில் நிலைபெறும்.

தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் தங்களின் மனச்சாட்சிப்படி சிந்திப்பார்களா? அவர்களது முடிவு, அவர்களுக்கான அரசியல் இடத்தை தீர்மானிக்கலாம்.

### நல்லூரான் திருவடி-2

# யோக சுவாமிகள் ஓர் அவதார புருஷர்!

கே. பி .எம். அபயசேகர



1962ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதி முதன் முதலாக யோகசுவாமிகளைச் சந்திக்கச்சென்றேன். அவரிடம் எதனையும் கேட்டுப் பெற வேண்டுமென்றோ அல்லது அவரிடம் எனது குறைகளை வெளியிட வேண்டுமென்றோ நான் எதனையும் எண்ணவில்லை. அவரது ஆன்மீக சக்தியை சோதிக்கவேண்டுமென்று கூட நான் கருதவில்லை. அந்த தெய்வீக ஒளியில் மூழ்கித் திளைக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாக இருந்தது.

அவரைக் காணப்போவதற்கு முன்னர் அரச சட்டத்தரணி ஆனந்த பெரேராவினது குறிப்பை வைத்திருந்தேன். அதிலிருந்த சுவாமிகள் கூறிய வார்த்தைகள் என்னைக் கவர்ந்திருந்தன. அதாவது, "நேரம் குறுகியது. ஆனால், விடயமோ பரந்தது" என்பதே அந்த வார்த்தையாகும். யோகருக்கு பிடித்தமான இந்த வார்த்தையை சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்தபோது கூறியிருந்தார்.

இறைவன் அனைவருக்கும் நல்ல வழி காட்டுவதற்கு இப்பூவுலகில் அவதார புருஷராக தோன்றுகின்றார். அத்தகைய அவதார புருஷரான யோகர் வாழ்ந்த அந்த சிறிய இல்லத்தை அடைந்தேன்.

என்னை அவரிடம் அறிமுகப்படுத்திய போது அவர் என்னை அபயம் என்று கூறி அழைத்தார். இதன் அரத்தம் உன்னை நான் எந்தவொரு சங்கடமான நிலையிலிருந்தும் காப்பாற்றுவேன் என்பதாகும். அப்போது பொய்மையான உலகிலிருந்து ஒரு நிஜமான உலகுக்கு வந்து விட்டதைப் போன்ற உணர்வைப் பெற்றேன்.

என்னிடம் பேச ஆரம்பித்தபோது வாழ்க்கையின் ஒருமைப்பாடு என்ற விடயத்தை குறிப்பிட்டார். "எல்லா உயிகளும் ஒன்று. இனம், மதம், சாதி என்றில்லை. எல்லா மதங்களும் ஓர் இலக்கை நோக்கித்தான் எம்மை வழிநடத்துகின்றன. அதுவே மோட்சம்" என்று சொல்லியதோடு, "நேரம் குறுகியது. விடயமோ பரந்தது" அதுவே நான் ஆனந்த பெரேராவுக்கு கூறுவது என்றார். அச்சமயம் நான் திகைத்து நின்றேன். ஏனெனில், நான் அவரிடம் வரும்போது நினைத்திருந்த அந்த வாசகத்தை யோகர் என்னிடம் கூறினார். எண்ண அலைகள் ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் சேருகின்ற பிரபஞ்ச அதிசயத்தை அன்று உணர்ந்தேன். அத்துடன், அவரோடு சேர்ந்திருப்பது போன்ற உணர்வையும் அப்போது பெற்றேன்.

யோகர் தொடர்ந்து என்னிடம் பேசினார் -

"நானே நீ. நீயே நான். நீர் ஒரு சிங்களவராக இருக்கலாம். நான் ஒரு தமிழராக இருக்கலாம். ஆனால், ஆன்மீக நிலையை அடையும் முயற்சியில் எல்லா உயிர்களும் சமமானவையே. இறைவன் முன்பாக எல்லோரும் சமமானவர்களே. இதன்காரணமாகவே புத்தபகவான் அஹிம்சையை அனைவரிடத்திலும் போதித்தார். நீர் ஒருவரைத் துன்புறுத்துவதென்பது உம்மை நீரே துன்புறத்துவதாகவே அமையும். உமக்கு நிச்சயம் ஒரு நல்ல எதிர்காலம் இருக்கின்றது. உம்மில் நம்பிக்கை வையும். தியாகம் செய்யாது எதனையும் பெரிதாக சாதிக்க முடியாது. எக்காரியத்தையும் தூயமனத்தோடு புரிந்தால் உமது வாழ்க்கையில் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். இறைவன் பெயரினால் உம்மை நான் ஆசீர்வதிக்கின்றேன்" என்று கூறிமுடித்தார்.


ஆலயம் என்பது கோட்பாடுகளில் அல்ல. கொள்கைகளில் அல்ல. மேல்மட்ட செல்வாக்குகளிலுமல்ல. என்பதை உணர்ந்த நிலையில் நான் வீடு திரும்பினேன். மதம் என்பது உண்மை நிலையை அறிதல் என்பதாகும்.

யோக சுவாமிகளின் வாழ்க்கை, அவர் கூறிய அறிவுரைகள், அவரது பாடல்கள் என்பவை இறையருளின மகத்துவத்தையே உணர்த்துகின்றன என்பதை காலவோட்டத்தில்தான் எம்மால் அறிந்துகொள்ள முடியும்.

தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓகஸ்ட் - 10 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 25
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சஷ்டி

**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அவ்வபோது டென்ஷன் ஆவீர்கள். தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டும்.

**துலாம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். பொறுமை தேவை.

**மீனம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# நாம் தமிழரின் வளர்ச்சி கண்டு தி. மு. க., பா. ஜ. க. அஞ்சுகின்றன

## சீமான் சொல்கிறார்

சென்னை, ஓக. 10

"நாம் தமிழர் கட்சி வளர்வதை பார்த்து தி. மு. க., பா. ஜ. க. அஞ்சுகின்றன," என்று சீமான் கூறினார்.

விருதுநகரில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சொத்துக் குவிப்பு வழக்கில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன் வழக்கை திரும்ப விசாரிக்க சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் கூறியமை சரிதான். அதனை வரவேற்கிறேன். சொத்துக் குவிப்பு வழக்கு விசாரிக்க வேண்டுமென்றால் மொத்த அமைச்சர்களையும் அழைத்துத்தான் விசாரிக்க வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி சொத்து குவிப்பதை எப்படி ஏற்க முடியும்?

தமிழ் கடவுள் முருகனை பா. ஜ. க., தி. மு. க தற்போது கையில் எடுத்துள்ளன. நாம் தமிழர் கட்சி வளர்வதை பார்த்து தி. மு. க., பா. ஜ. க. அஞ்சுகின்றன. இதனால் நாங்கள் கையில் எடுத்த முருகனை தற்போது இரு கட்சிகளும் கையில் எடுத்துள்ளன," - என்றார். (ஐ)

# மன்னிப்பு கேட்டார் ஜெயக்குமார் வழக்கை இரத்து செய்தது மன்று!

சென்னை, ஓக. 10

திருச்சி காவல் நிலையத்தில் கையெழுத்திட சென்றபோது தமிழக முதல்வருக்கு எதிராகக் கோஷம் எழுப்பியதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீது பதியப்பட்ட வழக்கை இரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின் போது கள்ள வாக்குப்போட முயன்ற நபரை தாக்கினார் என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் பொலிஸ் நிலையத்தில் அவர் கையொப்பமிட வேண்டும் என்று அவருக்கு உத்தரவிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, பொலிஸ் நிலையத்துக்கு தனது தொண்டர்களுடன் ஜெயக்குமார் சென்றிருந்தார். அப்போது, தமிழக அரசு, முதல்வர், பொலிஸாருக்கு எதிராக அவர்கள் கோஷம் எழுப்பினர் என்று வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை இரத்து செய்யக்கோரி உயர்நீதிமன்றில் ஜெயக்குமார் வழக்கு தாக்கல் செய்தார். இரு வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த வழக்கில் தாங்கள் எழுப்பிய அனைத்துக் கோஷங்களுக்காகவும் மன்னிப்பு கோருவதாகக் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து, இந்த வழக்கு இரத்துச் செய்யப்பட்டது.

# இந்துகளுக்கு எதிராக வன்முறை கண்டித்து திங்களன்று போராட்டம்!

சென்னை, ஓக. 10

பங்களாதேஷில் இந்துக்களுக்கு எதிரான வன்செயல்களை கண்டித்து நாளை மறுதினம் திங்கள்கிழமை இந்து முன்னணி சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையில்,

பங்களாதேஷில் இந்துக்களுக்கு எதிராக நடக்கும் மனிதத் தன்மை அற்ற வெறிச் செயல்களை கண்டித்தும், அங்குள்ள இந்துக்களுக்கு நீதி கோரியும் இந்து முன்னணி வரும் திங்கட்கிழமை மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு ஆதரவளிக்க வேண்டுகிறேன்" - என்றுள்ளது. (ஐ)

# இராஜகோபுரங்களை நகர்த்தி மீள அதே இடத்தில் வைக்கவும்

## ரயில் திணைக்களத்துக்கு நீதிமன்று உத்தரவு

சென்னை, ஓக. 10

சென்னை - ஆயிரம் விளக்கு பகுதியில் அமையவுள்ள மெட்ரோ இரண்டாம்கட்ட ரயில் பணிகளுக்காக பழமை வாய்ந்த கோயில்களின் இராஜ கோபுரங்களை 5 மீற்றர் உள்ளே நகர்த்தி வைத்துவிட்டு, பணிகள் முடிந்ததும் மீண்டும் அதே இடத்தில் அமைத்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்காக ஆயிரம் விளக்கு பகுதியில் ராயப்பேட்டையில் உள்ள நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சிரீ ரத்தின விநாயகர் மற்றும் துர்க்கை அம்மன் கோயில் கோபுரங்கள் மற்றும் அங்குள்ள இராஜ கோபுரத்தை இடிக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கள ஆய்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து நடந்த விவாதங்களில், 30 அடி ஆழத்தில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெறும்போது கோபுரங்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

எனவே, ராஜகோபுரத்தை நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் 5 மீற்றர் தூரத்துக்கு உள்புறமாக நகர்த்தி வைத்து விட்டு, பணிகள் முடிந்ததும் மீண்டும் அதே இடத்தில் அமைக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதனை பரிசீலித்த நீதிமன்றம் அதனை தீர்ப்பாக வழங்கியுள்ளது.

# சிறுபான்மை மக்களை குறிவைத்து சட்ட திருத்தம்!

## கனிமொழி எம். பி. சாடல்

கொழும்பு, ஓக. 10

சிறுபான்மை மக்களை குறி வைத்து வக்பு சட்ட திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது என்று கனிமொழி எம். பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.


வக்பு சட்டம் கடந்த 1995ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்கள் தானமாக வழங்கிய நிலங்கள் மூலம் வரும் வருவாயானது மதநீ, இஸ்லாமியர்களின் கல்வி மேம்பாடு உள்ளிட்டவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை திருத்தியமைக்கும் விதமாகவே பா. ஜ. க. அரசாங்கம் இந்த சட்டத்தைத் திருத்துகிறது. இதற்கு காங்கிரஸ், தி. மு. க. கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் தி. மு. கவின் எம். பி. கனிமொழி பாராளுமன்றில் ஆற்றிய உரையில்,

மத சுதந்திரத்தில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா தலையிடுகிறது. இந்த மசோதா மனித உரிமைக்கு எதிரானது. அரசியல் அமைப்பு மட்டுமின்றி கூட்டாட்சி முறைக்கும் இது எதிரானது. நாட்டு மக்கள் இடையே பிரிவை ஏற்படுத்தும் முயற்சி இதுவாகும். குறிப்பிட்ட மதம், சமுதாயத்தினரை குறி வைத்து இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள், சிறுபான்மையினருக்கு முற்றிலும் எதிரான மசோதா. சிறுபான்மை மக்களை குறி வைத்து வக்பு வாரிய சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட சபுமல்கஸ்கட விகாரை திறக்கப்படுகிறது



வவுனியா, ஓக. 10

**வவுனியா சிங்களக் குடியேற்றத்தின் பௌத்த - சிங்கள அடையாளமாக நிறுவப்பட்ட சபுமல்கஸ்கட விகாரை எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.**

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வவுனியாவின் கொக்கச்சாங்குளம் - ஊற்றுக்குளத்தில் தொல்லியல் என்ற பெயரில் இந்த விகாரை அமைக்கும் பணி ஆரம்பமானது.

திருகோணமலை துறைமுகம் ஊடக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட புத்தரின் புனித தந்தம் அநுராதபுரம் கொண்டு செல்லும்போது சபுமல்கஸ்கட வழியாகவே பயணித்தது என்று கல்கமுவ சாந்தபோதி தேரர் கூறுகிறார். இதற்கு ஆதரமும் என்றும் அவர் கூறுகிறார்.

இந்தப் பிக்குவே, குருந்தூர் மலை ஆதிசிவன் ஆலயத்தை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையின் விகாரதிபதியாகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், வவுனியா வடக்கில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவுவதை அரசாங்கம் வேகப்படுத்தியது.

வவுனியாவின் குடியேற்றங்கள் கச்சல்சமளங்குளம், முதலிக்குளம், ஊற்றுக்குளம், கொக்கச்சாங்குளம் ஆகிய தமிழ் கிராமங்களின் எல்லைக்கோட்டின் வழி நகர்ந்து வவுனியா வடக்கின் வெடிவைத்தகல்லு வரை பரவலாக்கப்பட்டு தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) சிங்கள குடியேற்றங்கள் வரை பரவி வருகின்றது. இந்தப் பகுதி தற்போது, சம்பத்நுவர பிரதேச செயலகமாக மாற்றப்பட்டு அதற்குள் வவுனியா சிங்கள குடியேற்ற கிராமங்களை இணைக்கும் பணி நடக்கிறது.

அந்த வகையில் இந்த சிங்கள பிரதேச செயலக பிரிவில் ஊஞ்சல்கட்டி, மருதோடை, பட்டிக்குடியிருப்பின் பெரும் பகுதிகள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செறிவாக பரவலாக்கப்படும் ஆக்கிரமிப்பை மையப்படுத்தி அதன் பௌத்த - சிங்கள அடையாளமாக சபுமல்கஸ்கட விகாரை நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நல்லூர் பெருந்திருவிழா சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. இரண்டாம் திருவிழாவான இன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லை திருஞானசம்பந்த ஆதீன கலா மண்படத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நிகழ்ச்சிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்கவுள்ளனர்.

சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறீ து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில், சாவகச்சேரி பிரதேச செயலகக் கணக்காளர் இரட்ணசிங்கம் ரமணன் பிரதம அதிதியாகவும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் அறநெறி பாடசாலை, மந்துவில் முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை, மண்டுவில் இலஞ்சி ஆரணியம் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக கலாவித்தகர், திருமதி. கவிதா கதிரமலையின் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருந்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# 35 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் தீவை அண்மித்த தென் கடல் பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் பயணித்த 4 படகுகளும் கைப்பற்றப்பட்டன என்று கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். (ஐ)

# அரியநேத்திரன் தொடர்பில் தமிழ் அரசின் முடிவு நாளை!

யாழ்ப்பாணம், ஓக. 10

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள அரியநேத்திரன் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முடிவு எடுக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுக்கட்டமைப்பு ஆகியன இணைந்து எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துகின்றன.

இதன்படி, தமிழ்ப் பொது வேட்பாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பா. அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டார். அரியநேத்திரன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் உள்ளார். இந்த நிலையில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடுவது குறித்து கட்சி தலைமைக்கு அறிவிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பணத்துக்காக வன்செயல்களில் ஈடுபட்ட 3 இளைஞர்கள் கைது!



யாழ்ப்பாணம், ஓக. 10

வெளிநாட்டில் வசிப்பவர்களிடம் பணம் பெற்று யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த வன்முறை கும்பலை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள், வீடுகளுக்கு தீ வைப்பு சம்பவங்கள் தொடர்பில் யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதான நபர்களிடம் இருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், இரண்டு வாள்கள், 4 பெற்றோல் குண்டுகள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய வன்முறை கும்பலுடன் சேர்ந்து இயங்கிய நபர் ஒருவர் தற்போது இந்தியாவில் வசிக்கிறார். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அவருக்கு பணம் அனுப்பி யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபர்கள் மூவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொக்கெய்னுடன் கனடாவில் இலங்கை தமிழர் ஒருவர் கைது!

ரொறன்ரோ, ஓக. 10

கனடாவில் பெருந்தொகை கொக்கெய்ன் போதைப்பொருளுடன் இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ப்ளூா வோட்டர் பாலத்தில் கிட்டத்தட்ட 120 கிலோகிராமுக்கு அதிகமான கொக்கைனுடன் அவர் கைது செய்யப்பட்டார். அவர் ட்ரக் சாரதியாவார். 42 வயதுடைய ஜூலி சபேசன் சத்தியசீலன் என்பவரே வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பாலத்தில் அவரின் ட்ரக் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட போது, கனடாவில் தடைசெய்யப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

கொக்கெய்ன் போதைப் பொருளை விநியோகித்த, உற்பத்தி செய்ததாக சபேசன் சத்தியசீலன் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவரது பிணைப்பத்திரம் 30 இலட்சம் கனடா டொலராக நிர்ணயிக்கப்பட்டது.

விசாரணை தொடர்வதால் மேலும் பல குற்றச்சாட்டுகள் சேர்க்கப்படலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 10

கூலர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முதியவர் அது பலனின்றி உயிரிழந்தார்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாடசாலையிலிருந்து தனது பேரனை ஏற்றிக்கொண்டு சைக்கிளில் சென்றவரை அதிவேகமாக பயணித்த கூலர் வாகனம் மோதியது.

இதில், சைக்கிளில் சென்ற இருவரும் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த 67 வயதான முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கூலர் வாகனத்தின் சாரதியை கைது செய்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் இளம் தாய் மரணம் உரிய நடவடிக்கை எடுப்போம்!

## சுகாதார அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக. 10

**மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இந்த விடயத்தில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண நேற்று உறுதியளித்தார்.**



பாராளுமன்றத்தில் மருத்துவ திருத்தச் சட்டமூலம்மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மருத்துவமனையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜாவின் மரணம் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மரணம் குறித்து துரிதகர மான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அவருக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படும். இது தொடர்பான விசாரணை அறிக்கையை இதுவரை ஆராயவில்லை. குறித்த விடயத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது தொடர்பில் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை நாட்டில் நோயாளர்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காகவே புதிய சட்டமூலமொன்றையும் முன்வைத்துள்ளோம் - என்றார். (ஐ)

# டிஜிற்றல் திரை பயன்பாடு; குழந்தைகளுக்கு ஆபத்து!

## சுகாதார மேம்பாட்டு பணியகம்

கொழும்பு, ஓக. 10

டிஜிற்றல் திரைகளைப் பயன்படுத்த இரண்டு வயதுக் குட்பட்ட குழந்தைகளை அனுமதிப்பது பொருத்தமற்றது. டிஜிற்றல் திரைகளால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் விசேட மருத்துவ நிபுணர் இனோகா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

டிஜிற்றல் திரைகளை பயன்படுத்துவதனால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி வீதம் பாதிக்கப்பட்டு வருகின்றது. பெரும்பாலான பெற்றோர் அதிக வேலைப்பளுவுக்கு மத்தியிலே தங்களது நேரத்தைச் செலவிடுகின்றனர்.

இந்தநிலையில், தங்களின் வேலைகளை இலகுவாக முன்னெடுப்பதற்காக அவர்கள் தங்களது குழந்தைகளிடம் கைபேசிகளை வழங்குகின்றனர். குழந்தைகள் தொடர்ந்து கைபேசிகளைப் பயன்படுத்தும்போது அவர்களின் மனநிலையில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்.

எனவே, பெற்றோர்கள் குழந்தைகளைக் கைபேசி உள்ளிட்ட டிஜிற்றல் திரை பயன்பாட்டிலிருந்து இயலுமானவரைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)



# கடும் காற்றால் வீடு சேதம் மூன்று குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 10

கடும் காற்றால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டதில் மூன்று குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

புதன்கிழமை இரவு சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட சுழிபுரம், கல்விளான் பகுதியில் கடும் காற்று வீசியது.

இதில், மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் வசித்த வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டது. இதில், பாதிக்கப் பட்டவர்கள் தற்காலிகமாக சுழிபுரம் திருவடிநிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மைத்திரியின் குடியுரிமையை இரத்து செய்யக்கோரி வழக்கு?

கொழும்பு, ஓக. 10

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமையை இரத்து செய்யுமாறு கோரி சிவில் செயல்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் குழு வழக்குத் தாக்கல் செய்யத் தயாராகி வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

2018இல் 52 நாள் அரசாங்கத்தை அமைத்தபோது வேண்டுமென்றே அரசமைப்பை மீறிய குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக இது அமைகிறது. நிறைவேற்று அதிகாரத்தில் மிக உயர்ந்த அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, அரசமைப்பை நிலைநிறுத்துவதாக சத்தியப்பிரமாணம் செய்கிறார்.

இதன்படி, நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின்படி செயல்படுவதே நிறைவேற்று ஜனாதிபதியின் முதல் பொறுப்பு. அவர் வேண்டுமென்றே அரசமைப்பை மீற முடியாது.

2018 இல், 52 நாள் அரசாங்கத்தை நிறுவிய பின்னர் மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைப்பதற்காக வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை உச்ச நீதிமன்றம் செல்லுபடியாகாது - இது அரசமைப்பை மீறுகிறது என்று தீர்ப்பளித்தது.

இதன்படி, அவர் வேண்டுமென்றே அரசியல் சாசனத்தை மீறியுள்ளார் என்பது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

எதிர்கால ஜனாதிபதிகளுக்கு முன்னுதாரணமாக அமையும் வகையில், மைத்திரிபால சிறிசேனவின் குடியுரிமையை வாழ்நாள் அல்லது குறிப்பிடத்தக்க காலத்துக்கு இரத்து செய்ய வேண்டுமென்று கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருந்த சிவில் செயல்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய குழுவால் இந்த மனு தாக்கல் செய்யப்படவுள்ளது. இவ்வாறானதொரு செயல்பாடு மீண்டும் இந்த நாட்டில் இடம்பெறாமல் தடுப்பதே இதன் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வெளிவிவகார அமைச்சர் எகிப்துக்கு பயணமானார்

கொழும்பு, ஓக. 10

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி எகிப்து நாட்டுக்கு சென்றுள்ளார். எகிப்திய வெளிவிவகார அமைச்சர் படர் அபிடலாட்டியின் அழைப்பின் பேரில் அவர் அங்கு சென்றுள்ளார்.

எகிப்திய வெளிவிகார அமைச்சர் மற்றும் முதலீட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஆகியோரை அமைச்சர் அலி சப்ரி சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் இந்தப் பயணம் அமையும் என தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 10

சைக்கிளில் சென்றவரை மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கிராண்ட்பாஸில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

பேலியகொடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், இருவரும் காயமடைந்தனர். எனினும், சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

பேலியகொடையை சேர்ந்த 59 வயது நபரே உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)



# மணல் கடத்திச் சென்ற 5 டிப்பர் சாரதிகள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 10

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை பிடித்த சாவகச்சேரி பொலிஸார் அவற்றின் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையில் நேற்று முன்தினம் இந்தக் கைது நடவடிக்கை எடுக் கப்பட்டது.

கைதான சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினமே சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களில் ஒருவர் 2 வாரங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் வரை எரிபொருள் விலை மாறாது!

கொழும்பு, ஓக. 10

செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை இலங்கையில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்கள் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை திருத்தம் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அரச உயர் அதிகாரி ஒருவர், "எரிபொருள் மற்றும் எரிவாயு விலை செப்ரெம்பர் வரை மாறாமல் இருக்கும். விலை நிர்ணய சூத்திரத்துக்கு ஏற்ப எந்தவொரு விலை திருத்தமும் தேர்தல் பிரசாரத்தில் சாதகமான அல்லது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு சில மாதங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் வெளிநாட்டு மருத்துவ பல்கலைகளுக்கு அங்கீகாரம்!

## மருத்துவ சட்டத் திருத்தத்துக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 10

**ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு மருத்துவ பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கும் வகையிலான மருத்துவ சட்டத் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.**

இந்த சட்டமூலத்தை சுட்டிக்காட்டிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, உலகளாவிய தரவரிசையில் இடம்பெற்றுள்ள வெளிநாட்டு மருத்துவ பல்கலைக்கழகங்களை இலங்கை அங்கீகரிக்க இயலும். உலக தரவரிசையில் முதல் 1000 மருத்துவ பல்கலைக்கழகங்களை நாங்கள் அங்கீகரிப்போம்," என்றார்.

"வெளிநாட்டு மருத்துவ பல்கலைக்கழகங்களில் இருந்து தகுதி பெற்ற சுமார் 300 இலங்கை மருத்துவர்கள் உள்ளனர். அவர்கள் தகுதி பெற்ற மருத்துவ பல்கலைக்கழகங்களை நமது நாடு அங்கீகரிக்காததால் அவர்கள் இலங்கையில் பணியாற்ற முடியாத நிலை உள்ளது. இந்த புதிய சட்டமூலத்தின் மூலம் அவர்கள் இலங்கையில் பணிபுரிய முடியும், ஏனெனில், அவர்கள் தகுதி பெற்ற பல்கலைக்கழகங்களை இலங்கை அங்கீகரிக்கும், "என்று அமைச்சர் கூறினார்.

"இது அறுவை சிகிச்சை நிபுணர்கள், குழந்தை மருத்துவர்கள் மற்றும் மனநல மருத்துவர்கள் உட்பட சிறப்பு மருத்துவர்களின் பற்றாக்குறைக்கு ஒரு தீர்வைக் கண்டறிய எங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும்," என்று அவர் மேலும் கூறினார்.

புலம்பெயர்ந்த சில மருத்துவர்கள் தமக்கு வேலை கிடைத்த நாடுகளின் நிலைமையை விட இலங்கையின் நிலைமை சிறந்ததாகக் காணப்பட்டதால், அவர்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார். "புதிய சட்டம் இந்த மருத்துவர்கள் திரும்புவதற்கு உதவும்," என்றும் அவர் கூறினார். (ஐ)



# வேலையற்ற பட்டதாரிகள் அநுரகுமாரவுடன் சந்திப்பு

கொழும்பு, ஓக. 10

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமாக அநுர குமார திஸநாயக்கவை சந்தித்தனர்.

இந்த சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இதுவரையில் வேலையில்லாத பட்டதாரிகள் எதிர்கொள்கின்ற சிக்கல்கள் குறித்தும் அதற்கான தீர்வு குறித்தும் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெட்டிய மரம் விழுந்தபோது அதில் சிக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஓக. 10

மரத்தை வெட்டியவர் அது விழுந்தபோது, அதன்கீழ் சிக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி - பலாங்கொடை - ஹல்பே பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சமனல வெவ , ஹல்பே பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயது நபரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# காஸா சிறுவர்களுக்காக திரட்டப்பட்ட நிதி கையளிப்பு

கொழும்பு, ஓக. 10

காஸா போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் திரட்டப்பட்ட பணம் பலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

காஸாவில் இடம்பெறும் யுத்தத்தால் இடம்பெயர்ந்த சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் படி நிறுவப்பட்ட "காஸா சிறுவர் நிதியத்துக்கு" மேலும் 5 இலட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கிடைத்தன.

இந்தத் தொகையை பலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இது தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்களை இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். ஸைத், ஐக்கிய நாடுகள் சபைக்கான நிவாரணப் பணி முகவர் நிறுவனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா ஆகியோரிடம் ஜனாதிபதி கையளித்தார்.

இதேவேளை, இப்தார் நிகழ்வுகளை நடத்துவதற்காக 04-01-2024 அன்று பலஸ்தீன அரசாங்கத்துக்கு 10 இலட்சம் டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுவர்கள் மத்தியில் மூச்சுத்திணறல் உயர்வு

கொழும்பு, ஓக. 10

சிறுவர்களுக்கு ஏற்படும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலைத் தொடர்ந்து மூச்சுத்திணறல் அறிகுறிகள் வருவதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின் உடனே அருகில் உள்ள மருத்துவரை நாடி ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமை எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# பேஸ்புக் பிரசார விளம்பரத்துக்கு ரூ. 51 இலட்சம் செலவிட்ட ரணில்!

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பிரசாரத்துக்காக 17 ஆயிரம் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 51 இலட்சம் ரூபாய் பேஸ்புக் நிறுவனத்துக்கு செலவிடப்பட்டுள்ளது என்று ஹாஸ்ராக் ஜெனரேசன் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் 30ஆம் திகதி முதல் ஜூலை 29ஆம் திகதி வரை அரசியல் கட்சிகள் பேஸ்புக் பிரசாரத்துக்காக செலவிட்ட தொகைகளை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பின் தரவின் படி, ரணிலுடன் இணையுங்கள் என்ற முகநூல் பக்கத்தில் 13 ஆயிரத்து 93 டொலர் பெறுமதியான 44 விளம்பரங்கள் முதலிடத்தை பிடித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட 17 விளம்பரங்களுக்காக 661 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

மேலும், ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து 10 விளம்பரங்களுக்காக 2 ஆயிரத்து 323 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கவின் 54 விளம்பரங்களுக்காக 354 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வாக்காளருக்கான ஆவணங்கள்; தேர்தல்கள் குழுவின் அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதி தேர்தலின்போது வாக்காளர் ஒருவரிடம் தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டால், அவர் சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு ஆகியவற்றை பயன்படுத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக் கொண்டு, அதனை பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதன்படி, வாக்காளர்கள் தமது பகுதிக்குரிய கிராம சேவகர்களை சந்தித்து, உரிய ஆவணங்களை பூர்த்தி செய்து, தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; மோசடி செய்தவர் கைதானார்

கொழும்பு, ஓக. 10

சீசெல்ஸில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாக கூறப்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனமொன்றின் உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்குச் சொந்தமான வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இரத்து செய்ய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அம்பாறை, அலிகம்பே கிராம மக்களுக்கான சுகாதார சேவையை மேம்படுத்த நடவடிக்கை

அம்பாறை, ஓக. 10

**அம்பாறை மாவட்டம் அலிகம்பே பிரதேசத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவொன்றினை ஏற்படுத்தி அதனூடாக அப்பகுதி மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னாள் பிராந்திய பணிப்பாளர்கள், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டம் தற்போதைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனினாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அலிகம்பே பிரதேச மக்களின் சுகாதார நலன்கருதி அங்குள்ள கத்தோலிக்க தேவாலய அருட்தந்தை எஸ்.ஜெகநாதன் மற்றும் அப்பகுதி பொது நிறுவனங்களின் முயற்சியின் பலனாக சுமார் 25மல்லியன் ரூபா நிதியில் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, அது அண்மையில் சுகாதார திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டது.

இந்தக் கட்டடப்பணிகளை முன்னெடுத்த தொண்டு நிறுவனத்தினர் அதற்கு நிதியுதவிகளை வழங்கிய ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள் அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை சந்தித்து அலிகம்பே மக்களின் சுகாதார மேம்பாடு தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது சுகாதார தேவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கான தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இந் நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிரும் கலந்துகொண்டார்.

(அ)

# வேப்பையடி கலைமகளில் நடந்த திறன் வகுப்பறைத் திறப்பு விழா

காரைதீவு, ஓக. 10

நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் ஒருங்கிணைப்பில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிபர் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

அமரர். கலாநிதி. சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோபனா சுதர்ஷன், நீலன் சுதர்சனின் நிதியுதவியில் இந்த திறன் வகுப்பறை மனிதநேய அறக்கட்டளை ஸ்தாபக தலைவர் கை.அரவிந்தனின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளாக மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர்களான ஆர்.சிரஞ்சீவி, திருமதி சாந்தி சிரஞ்சீவி , உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, மற்றும் அம்பாறை விஞ்ஞான ஒன்றிய ஸ்தாபக தலைவர் தி.கோபிநாத், இணைப்பாளர் வ.யதுர்சன், ஆசிரிய ஆலோசர்களான பி.மோகன் , கே. சந்திரகுமார் உள்ளிட்டவர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கே. மதிவண்ணன், பழைய மாணவர் மன்றத் தலைவர் லோஷனன் விஞ்ஞான ஒன்றிய உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)



# விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாசிப் பயறு பயிர்ச்செய்கை திட்டம் ஆரம்பம்

அம்பாறை, ஓக. 10

சம்மாந்துறை பிரதேசத்தின் பின்தங்கிய கிராம புறங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாசிப் பயறு பயிர்ச்செய்கை வேலை திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு கல்லைரச்சல் -2 கிராம சேவகர் பிரிவில் மயில் ஓடை வட்டையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இன் நிகழ்விற்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரிகள், விவசாய போதனாசிரியர், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

# ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் செயற்பாடு பாராட்டத்தக்கது

அம்பாறை, ஓக. 10

குறைவான வளங்களைக் கொண்டு திறமையாக பணி செய்துவரும் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு மின்பிறப்பாக்கி மற்றும் ஒருதொகுதி தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஏ.அகிலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது. சுகாதார வைத்திய அதிகாரியினதும், அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களினதும் கடின உழைப்பே அதற்குப் பிரதான காரணமாகும். குறித்த அலுவலகத்திற்கு எதிராக இதுவரை எந்தவொரு முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.



அந்தவகையில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அகிலன் உள்ளிட்ட அந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களை பாராட்டுகின்றேன். இந்த அலுவலகத்தில் 5 எஸ் முறைமையினை நடைமுறைப்படுத்தி இதன் சேவைத் தரத்தினை மேலும் கூட்ட வேண்டும். கடந்த காலங்களில் இந்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சுக வனிதையர்களுக்கான சேவை வழங்குதலில் சிறப்பு விருதுகளையும் பெற்றுக்கொண்டது. அதனை தக்க வைத்துக்கொள்வது இங்குள்ளவர்களின் பொறுப்பாகும்.

உங்களுடைய தேவைகள் குறைபாடுகளை தெரியப்படுத்துமிடத்து அவற்றினை முடியுமானளவு நிவர்த்தி செய்வோம். எதிர்வரும் ஆண்டில் இந்த அலுவலகத்திற்கு அதிகமான நிதிகளை ஒதுக்கி அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ)

# கல்முனை மாநகர நூலகங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

கல்முனை, ஓக. 10

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ், சம்பந்தம்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



கல்முனை மாநகர பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை ஆராயும் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மாநகர சபை கூட்ட மண்டபத்தில் ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களில் நிலவி வருகின்ற குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்களிடம் கேட்டறிந்துகொண்ட ஆணையாளர், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட வேலைத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

இந்நிலையில் நூலகங்களின் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கும் தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், களஞ்சியக் காப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன் போதிய வசதிகள், ஆளணிகள் இருந்தும் சில நூலகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக வாசகர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் நூலகர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் உதாசீனம் செய்யாமல், முறையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஆணையாளர், தவறிழைக்கும் பணியாளர்கள் மீது எவ்வித தயவுமின்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

# லொறியுடன் மோதி யானை பலி!

திருமலை, ஓக. 10

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற லொறியுடன் காட்டு யானையின்று மோதுண்டதில் சம்பவ இடத்திலேயே யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் அலுவலக உத்தியோத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை திருகோணமலை தபலகமுவ பிரதேசத்தில் விபத்தை ஏற்படுத்திய லொறியை கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானை சுமார் 15 வயதுடைய பெண் யானை என அடையாளம் காணப்பட்டது. கந்தளாய் லஹுபத்த காட்டுப் பகுதியில் வசித்த யானை வீதியை கடக்கும்போது இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என வனஜீவராசிகள் காரியாலய பாதுகாப்பு அதிகாரி எஸ்.ஏ.பீ.கே.நந்தசேன தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவராக யூனுஸ் பதவியேற்றார்!



டாக்கா, ஓக. 10

**பங்களாதேஷில் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பத ணவியேற்றது.**

பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பதவியை துறந்த பிறகு மூன்று நாட்களுக்குப் பிறகு, இந்த பதவியேற்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்த புதிய அரசு பங்களாதேஷில் தேர்தலை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


பாரிஸில் மருத்துவ சிகிச்சையில் இருந்த யூனுஸ், போராட்டக்காரர்களின் கோரிக்கையை ஏற்று நேற்று டாக்கா திரும்பினார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்த நாடு மிகவும் அழகான தேசமாக மாற இது ஒரு வாய்ப்பு. எங்கள் மாணவர்கள் எந்தப் பாதையைக் காட்டுகின்றார்களோ, அதனை முன்னெடுத்துச் செல்வோம்" என்று தெரிவித்தார்.

யூனுஸ் தலைமையிலான இந்த இடைக்கால அரசாங்கத்தில் 16 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். முகமது யூனுஸூக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து கடந்த 5ஆம் திகதி தனது பதவி விலகினார். உடனடியாக இராணுவ விமானம் மூலம் டாக்காவில் இருந்து புதுடில்லிக்கு தப்பித்தார். தற்போது அவர் டில்லியில் இரகசிய இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவருக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷை விட்டு ஷேக் ஹசீனா வெளியேறியதை அடுத்து அந்தநாட்டின் இராணுவத் தளபதி நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்பதாக அறிவித்தார். இதையடுத்து, இடைக்கால அரசை அமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர்கள், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் இராணுவத் தளபதி ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் வேறு யாரை நியமித்தாலும் அதனை தாங்கள் ஏற்க மாட்டோம் என்றும் மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதையடுத்து, இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸ் நியமிக்கப்பட்டார்.

(ஐ)



மறைந்த தலைவர் இஸ்மாயில் ஹனியேயுடன் புதிய தலைவர் யாஹ்யா சின்வார்

# ஹமாஸ் அமைப்பினர் புதிய தலைவரை தெரிந்தனர்

டோஹா, ஓக. 10

ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவராக யாஹ்யா சின்வார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹமாஸ் அமைப்பின் உயர் மட்டத் தலைவர்கள் கட்டாரில் இரகசிய இடம் ஒன்றில்கூடி தமது அரசியல் தலைவரைத் தெரிவு செய்தனர்.

காசாவில் ஹமாஸ் - இஸ்ரேல் போர் கிட்டத்தட்ட ஒரு வருடத்தை எட்டுகிறது. இந்த நிலையில், அந்த அமைப்பின் தலைவர்கள் பலரும் அங்கு ஒன்றுகூடினர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட யாஹ்யா சின்வார் ஹமாஸின் முக்கிய தாக்குதல் தளபதி யாவார். இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்திய தாக்குதலை இவரே வழிநடத்தியிருந்தார். இந்தத் தாக்குதலில் 1,198 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலை இவரே வழிநடத்தியிருந்தார். இந்தத் தாக்குதல் மூலம் சின்வார் உலகளாவிய ரீதியில் தெரிந்த நபராகவும் ஹமாஸ் அமைப்பின் பெரும்புகழ்பெற்ற நபராகவும் மாறியிருந்தார்.

முன்னதாக ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரான் தலைநகர் தெஹ்ரானில் கடந்த ஜூலை 31ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலுடனான சமரசப் பேச்சுகளில் அவரின் பங்கு மிகமுக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# நேபாளம் ஹெலி விபத்து ஐந்து பேர் உயிரிழந்தனர்!

காத்மாண்டு, ஓக. 10

நேபாளத்தில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

காத்மண்டு சர்வதேச விமான நிலையத்திலிருந்து சியாபுரு பென்ஸி நகருக்கு அந்த ஹெலிகொப்டர் புறப்பட்டது. புறப்பட்ட 3 நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

இந்நிலையில் காத்மாண்டு நகரின் வடமேற்கு பகுதியிலுள்ள சூர்யாசவுர் எனும் மலைக்காட்டில் ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியது தெரியவந்தது. மீட்பு குழுவினர் ஹெலிகொப்டர் விபத்துக்கு உள்ளானவர்களை மீட்டபோது விமானி உட்பட அதில் பயணித்த ஐவரும் உயிரிழந்தமை தெரிய வந்தது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு காத்மாண்டு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம் விபத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 2025இல் சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்பி வருவார்!

வாஷிங்டன், ஓக. 10

விண்வெளியில் சிக்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோர் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பூமி திரும்புவர் என்று நாஸா அறிவித்துள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (வயது 58), மற்றொரு வீரரான புட்ச் வில்மோர் (61) ஆகியோர் கடந்த மாதம் 5ஆம் திகதி ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர். அங்கு அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அவர்கள் திட்டமிட்டபடி 22ஆம் திகதி பூமிக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஹீலியம் வாயுக்கசிவு மற்றும் உந்துவிசை கருவியில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்கு திரும்புவதில் சிக்கல் உருவானது.

இந்த பிரச்னையால் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த 50 நாட்களுக்கு மேலாக விண்வெளியில் சிக்கியுள்ளனர். அவர்களை அழைத்து வர ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உதவியை நாஸா நாடியுள்ளது.

அந்த நிறுவனத்தின் டிராகன் விண்கலம் அடுத்த பெப்ரவரியில் பூமி திரும்புகிறது. இதனால், அதில் இருவரையும் அழைத்து வர ஏற்பாடாகியுள்ளது. 8 மாதங்கள் கழித்தே பூமி திரும்புவதால் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நாஸா செய்து வருகின்றது.

(ஐ)

# இசை நிகழ்ச்சியில் பலரை கொல்வதற்கு சதித்திட்டம்!

## இருவர் கைதாகினர்

வியன்னா, ஓக. 10

ஆஸ்திரியாவின் வியன்னாவில் பிரபல பொப் பாடகி ரெய்லர் ஸ்விப்ட் நிகழ்ச்சியின்போது, பலரை கொல்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்டமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கொப் பாடகி ரெய்லர் ஸ்விப்ட், ஐரோப்பிய நாடுகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். ஆஸ்திரியாவின் வியன்னாவில் நேற்றுமுன்தினம் தொடக்கம் மூன்று நாட்களுக்கு இசை நிகழ்ச்சிகளை நடத்த அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் அரங்குகளில் வெடிகுண்டு தாக்குதல் நடத்த, ஐ. எஸ் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தனர் என்று தகவல்கள் வெளியாகின. இதையடுத்து, அந்த நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டன.



இது தொடர்பில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையிலேயே இந்த விடயங்கள் வெளிப்பட்டன.

அத்துடன், அவர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையில் ஐ.எஸ்., அமைப்பு தொடர்பான ஆவணங்கள், வெடி பொருட்கள், கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஷ்டஈடான 9.2 இலட்சம் டொலரை மோசடி செய்வதற்கு சிலர் திட்டம்!

**முஜிபுர் ரஹ்மான் எம். பி.**

கொழும்பு, ஓக. 10

**அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையும் மற்றும் மாஹோவில் இருந்து அநுராதபுரம் வரையிலும் ரயில் பாதையை திருத்திய இந்திய நிறுவனம் வேலை தாமதத்துக்காக 9 இலட்சத்து 20 ஆயிரம் டொலரை அரசாங்கத்துக்கு நஷ்டஈடாக செலுத்த வேண்டியுள்ளது. இந்த நஷ்டஈட்டை வேறு டீல் ஊடாக தமது பைக்குள் போட்டுக்கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர் என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

அநுராதபுரத்தில் இருந்து வவுனியாவுக்கும் மற்றும் மஹோவில் இருந்து அநுராதபுரம் வரையிலும் போடப்படும் ரயில் பாதை திட்டத்தில் 91 மில்லியன் டொலர் செலவாகிறது. அதாவது 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவாகிறது.

இதில் உள்ள நிபந்தனை என்னவென்றால் குறிப்பிட்ட தினத்துக்குள் இந்த வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்யாவிட்டால் 10 ஆயிரம் டொலர் நாளொன்றுக்காக தண்டப்பணமாக புகையிரதத் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டும். அது தொடர்பான உடன்படிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையிலான ரயில் பாதை அமைப்பு பணி ஜூன் 7ஆம் திகதிக்கு நிறைவு செய்திருக்க வேண்டும். ஆனால், ஜூலை 13ஆம் திகதியே அது நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்படி 36 நாட்கள் அதனை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த நிறுவனம் 3 இலட்சத்து 60 ஆயிரம் டொலர்களை நஷ்ட ஈடாக செலுத்த வேண்டும். இதன் இலங்கை பெறுமதி 16 கோடி ரூபாயாகும். அத்துடன் மாஹோவில் இருந்து அனுராதபுரம் வரையிலான ரயில் பாதை அமைப்பு பணி ஜூலை 6ஆம் திகதி நிறைவு செய்திருக்க வேண்டும். ஆனால், இன்னும் அது நிறைவடையவில்லை. ஓகஸ்ட் மாதத்திலேயே நிறைவு செய்யவுள்ளதாக பொறியியலாளர்கள் கூறியுள்ளனர். அப்படி நிறைவு செய்தால் 56 நாட்கள் தாமதமாகலாம். இதற்காக 5 இலட்சத்து 60 ஆயிரம் டொலர்களை தண்டப்பணமாக செலுத்த வேண்டும். இதன்படி இரண்டு திட்டங்களுக்கும் 9 இலட்சத்து 20 ஆயிரம் டொலர் முழுமையாக அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் இந்த திட்டத்தின் பணிப்பாளரான பொறியியலாளர் அசோக முனசிங்கவை நீக்கியுள்ளனர். அவரை அமைச்சின் செயலாளரே நீக்கியுள்ளார். அந்த செயலாளர் பெரும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் உள்ள அதிகாரியாவார். ஏன் இவர் ரயில் பாதை அமைக்கும் திட்டத்தின் பணிப்பாளரான பொறியியலாளர் அசோக முனசிங்கவை நீக்க வேண்டும். இந்திய நிறுவனம் புகையிரதத் திணைக்களத்திற்கு குறித்த திட்டத்தின் தாமதத்தால் செலுத்த வேண்டிய நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அதிகாரியே பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதனை ஜனாதிபதி அறியவில்லையா என்று கேட்கிறோம். டீல் ஒன்றின் ஊடாக இந்திய நிறுவனத்துக்கு அந்த நஷ்டஈட்டை செலுத்த வேண்டாம் என்று கூற முயற்சிக்கின்றனர். வேறு டீல் ஊடாக அந்த பணத்தை தமது பைக்குள் போட்டுக்கொள்ள முயற்சிக்கின்றனர் - என்றார். (ஐ)

# 712 ஆயுர்வேத வைத்தியர்கள் பதிவுக்காக விண்ணப்பிப்பு!



கொழும்பு, ஓக. 10

ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே 712 பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அவர்களுக்கான பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேத வைத்திய சபைக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்த பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களில் 45 வயதுக்கு உட்பட்டோருக்கு எழுத்துமூல பரீட்சையும், 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்மொழி மூலப் பரீட்சையும் நடத்தப்படும்.

கடந்த இரண்டு வருடங்களில் 552 ஆயுர்வேத வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பாரம்பரிய வைத்தியர்களின் பெயர்கள் பாரம்பரிய வைத்திய சபையில் பதிவு செய்யும் முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென தற்போது பொய்யான செய்திகள் பரவி வருகின்றன என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

# மகனின் முகத்தில் சூடு போட்ட தந்தை

கொழும்பு, ஓக. 10

தனது 9 வயது மகனின் முகத்தில் சூடு வைத்த தந்தையை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலி - தொடங்கடை பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவனின் தாயார் ஓமான் நாட்டில் பணி புரிந்து வரும் நிலையில், சிறுவன் தனது தந்தை, பாட்டி, தாத்தா ஆகியோருடன் வசித்து வருகிறார்.

கடந்த 3ஆம் திகதி சிறுவன் விளையாடச் சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பியுள்ளார். குடிபோதையிலிருந்த தந்தை மகனை திட்டியுள்ளார். மகனும் பதிலுக்கு தந்தையுடன் முரண்பட்டுள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த தந்தை மகனின் முகத்தில் சூடு போட்டுள்ளார்.

தொடங்கொட பிரதேச செயலகம் விடுத்துள்ள அறிவித்தலின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் 157 முறைப்பாடு பதிவு

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 157 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு இதுவரை 102 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு இதுவரையில் 55 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# ரணிலின் பக்கம் சென்றவர்கள் மீளவும் எம். பியாவது சந்தேகம்!

**திஸ்ஸகுட்டி ஆராச்சி**



கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றுள்ளவர்கள் அடுத்த முறை பாராளுமன்றத்துக்கு தெரிவாகுவதுகூட சந்தேகமாக உள்ளது. இவர்களுக்கு அங்கும் இடமில்லை - இங்கும் இடமில்லை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸகுட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பணிமனையில் நடந்த சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், போராட்டத்தின் போது நாட்டு மக்கள் இளம் தலைவரை கோரினார்கள். ஆகவே ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை நாங்கள் களமிறக்கியுள்ளோம். இந்த நாட்டை இளைஞர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ திறமையானவர் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்றுள்ள பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் இன்று கட்சிக்கு எதிராகவும், கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இவர்கள் அடுத்த பாராளுமன்றத்துக்கு தெரிவாவதுகூட சந்தேகமாக உள்ளது.

ஜனாதிபதி பக்கம் சென்றுள்ளவர்களுக்கு அங்கும் இடமில்லை - இங்கும் இனி இடமில்லை. சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுபவர்களை நெருக்கடியான தருணங்கள் வெளிப்படுத்தும். வெற்றி பெறும் சிறந்த வேட்பாளரை நாங்கள் களமிறக்கியுள்ளோம்.

ஜனாதிபதி பக்கம் சென்றுள்ளவர்கள் பொறுமையாக இருக்கக்கற்றுக்கொள்ள வேண்டும். அரசியல் பொறுமையை இவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# வன்புணர்வு குற்ற கைதி தப்பியோட்டம்!

கண்டி, ஓக. 10

பாலியல் வன்புணர்வு குற்ற சந்தேகநபரான கைதி ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளார்.

கண்டி - தும்பர போகம்பரை சிறைச்சாலையின் கைதி மனநலம் பாதிக்கப்பட்டு கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள்ளார்.

நோர்டன் பிரிட்ஜ் கலவத்தை, ஹெல்பொடவத்தையை சேர்ந்த மாரிமுத்து தவராஜ் என்ற 29 வயதுடைய கைதியே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளார்.

பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவிருந்த நிலையிலேயே தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முட்டை இறக்குமதி நடவடிக்கை 10 நாட்களுக்குள் ஆரம்பமாகும்!

கொழும்பு, ஓக. 10

அடுத்த 10 நாட்களுக்குள் முட்டை இறக்குமதி மீண்டும் ஆரம்பமாகும் என்று இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கொள்முதல் நடவடிக்கைகள் தற்போது நடக்கின்றன என்று அதன் தலைவர் ஆசிறி வலிசுந்தர குறிப்பிட்டார்.

உள்ளூர் சந்தையில் முட்டை ஒன்று 50 ரூபாய்க்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால், முட்டை இறக்குமதிக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி மாதம் 3 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார்...

ஒன்று மோதுண்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஏனைய மூன்று பேரும் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## எம்.பி....

சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஐக்கிய மக்கள் தம்மை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கியதை எதிர்த்து இரண்டு தனித்தனியான வெளியேற்ற மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த வருடம், ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார மீது விதித்த தடையை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருந்தது.

குறித்த இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு கட்சியின் செயற்குழுவினால் தடை விதிக்கப்பட்டது.

எனினும், இருவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டதையடுத்து, அந்த தடைநீக்கப்பட்டது.

இதன் பின்னர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தது.

கடந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி, அவர்களது கட்சி உறுப்புரிமையும் ரத்துச் செய்யப்பட்டது.

குறித்த இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் நிலையில், அரசாங்கத்தில் இணைந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த தீர்மானத்தை எடுத்திருந்தது.

இதன் பின்னர் கட்சியில் இருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்வதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கட்சி யாப்பின் பிரகாரம் அதன் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது கட்சியின் செயற்குழுவிற்குரிய பொறுப்பு என்றும் இது கட்சித் தலைவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒன்றல்ல என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

எனவே சஜித் பிரேமதாஸவின் இந்த தீர்மானம் கட்சியின் விதிகளின்படி அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நீதியரசர்களான விஜித் மலல்கொட அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றதையடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று இடம்பெற்ற விசாரணையில் இந்த முக்கிய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனுஷ நாணயக்கார சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபாவும், ஹரின் பெர்னாண்டோ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவும், ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரியா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் சார்பில் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் சம்பத் விஜேவர்தன ஆகியோர் ஆஜராகினர். (அ)

## மனுஷவின்...

நடத்தி தீர்மானிக்கும் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

அரசாங்கத்துக்கு அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை, கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் சட்டரீதியானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையிலேயே, ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் வெற்றிடமாகியுள்ளன.

மனுஷ நாணயக்கார தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானதுடன், ஹரின் பெர்ணான்டோ தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்புரிமையை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பதவியை...

சுற்றுலா சபை ஊழியர்களிடம் நேற்று விடை பெறுவதற்கு முன்னர் உரையாற்றிய ஹரின் பெர்னாண்டோ, உயர் நீதிமன்றம் இன்று காலை வழங்கிய உத்தரவுக்கு தலை வணங்குவதாகவும், இவ்வாறு நடக்கலாம் என்று தெரிந்தே ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் பதவியை நீக்கினாலும் இந்த நாட்டின் குடியுரிமையை நீக்க முடியாது என தெரிவித்த அவர், அமைச்சராக இருந்த இரண்டு வருடங்களில் நேர்மையாகச் செயற்பட்டதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட பதவிகளை சுற்றுலாச் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் விட் டுச் செல்ல வேண்டிய அவசியமில்லை எனவும், மேற்கொள்ளப்பட்ட பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## அரசியல்...

தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதனிடையே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு மனுதாரர்கள் தலா 150,000 ரூபா செலுத்தவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் நியமிக்கப்பட்ட அரசியல் ரீதியான பாதிப்புகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவின் தலைமையில் நியமிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூவரடங்கிய ஆணைக் குழு நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தயா சந்திரசிறி ஜயதிலக மற்றும் ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் அடங்கியிருந்தனர்.

லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னணியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பின்னணியை விசாரிக்கும் பணி அதன் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் வழக்குகளையும் ஆணைக்குழு விசாரித்தது. (அ)

## புலிகளை ஒழித்ததுபோல்...

பொன்சேகா, நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவி மற்றும் கட்சியின் களனி அமைப்பாளர் பதவிகளில் இருந்து வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நான் சுயாதீன வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளேன். இந்நாட்டின் கட்சி அரசியல் என்பது ஊழல், மோசடிகளால் நிரம்பியுள்ளது என்பதை நான் பல தடவைகள் கூறியுள்ளேன்.

கட்சி அரசியல் என்பது ஜனநாயக ரீதியாக இருக்க வேண்டும். ஆனால், எமது நாட்டில் மோசடியாளர்கள்தான் கட்சிகளை வழிநடத்தி செல்கிறார்கள். இந்தக் கட்சிகளில் உள்ள பெரும்பாலானோரும் மோசடியாளர்களாகத்தான் இருக்கிறார்கள்.

ஏனைய உறுப்பினர்களுக்கு நாட்டை வழிநடத்தும் அளவுக்கு போதிய அறிவும் தெளிவும் திட்டங்களும் கிடையாது. நான் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் விலகியுள்ளேன். எனினும், எனக்கு வாக்களித்து பாராளுமன்றுக்கு அனுப்பிய களனி மக்களுக்காக தொடர்ந்தும் சேவை செய்தத் தயாராகவே உள்ளேன்.

நாட்டை வழிநடத்தக்கூடிய சரியான தலைவரை மக்கள் இம்முறை தெரிவு செய்ய வேண்டும்.

இராஜதந்திர ரீதியாக தலைமைத்துவம் வகிக்கக்கூடிய ஒருவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக நான் பெரும் பங்காற்றியிருந்தேன். எனினும், இந்தக் கட்சியின் தலைவரின் செயற்பாடுகள் தொடர்பாக என்னால் திருப்தியடைய முடியாது.

பொருளாதார நெருக்கடி காலத்தில், அரசாங்கத்தை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவருக்கு அழைப்பு வந்த போது, நான் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவருக்கு வலியுறுத்தினோம்.

ஆனால், சிறுபான்மையான உறுப்பினர்களுடன் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முடியாது என அவர் அதை தட்டிக் கழித்தார். ஆனால், 2015 இல், 44 உறுப்பினர்களுடன் தான் அரசாங்கத்தை பொறுப்பேற்றிருந்தோம். அந்த அரசாங்கத்தை ஒரு வருடம் கொண்டும் சென்றிருந்தோம்.

நாட்டில் எல்லாம் சரியான பின்னர், முழுமையான அரசாங்கமொன்றை தானா நீங்கள் பொறுப்பேற்பீர்கள் என்று வினவியிருந்தேன். ஏனெனில், எதிர்க்கட்சி என்றால் வீழ்ந்துக் கிடக்கும் நாட்டை தான் பொறுப்பேற்க வேண்டும். எனினும், இந்த சவாலை அவர் அன்று ஏற்கவில்லை.

பின்னர், பாராளுமன்றில் ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நடந்தபோது, அநுரகுமார திஸாநாயக்க 3 உறுப்பினர்களுடன் போட்டியிட்டிருந்தார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரோ அந்தப் போட்டியிலிருந்தும் விலகினார்.

இப்படியான தலைவர்தான் இன்று பாடசாலைகளுக்கு சென்று பஸ்களையும் உபகரணங்களையும் வழங்கி வருகிறார். இதற்கான நிதி எங்கிருந்து கிடைக்கிறது? பொதுஜன பெரமுனவுக்கு நிதி வழங்கிய கொழும்பின் கஷினோ வியாபாரிகள்தான் இவருக்கும் நிதியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால்தான் மொட்டுக் கட்சியிலிருந்து வெளியேறும் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தொடர்பாக மக்களும் சிந்திக்க வேண்டும். புலிகள் அமைப்பை முற்றாக அழிப்பேன் என கூறியபோது, யாரும் நம்பவில்லை. இறுதியில் செய்துக் காண் பித்தேன். அதேபோல, நாட்டின் ஊழல் மோசடிகளையும் நான் ஆட்சிக்கு வந்தவுடன் இல்லாதொழிப்பேன். - என்றார். (அ)

## சுயேச்சை...

இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்களுக்கு சமமாக, பெண்களின் உரிமைகள் வலுவூட்டப்பட்டு பாதுகாக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறினார். (அ)

## கடைசி...

"ஜனாதிபதித் தேர்தலில் நாமல் போட்டியிடமாட்டார், அவர் போட்டியிடுவது மஹிந்த ராஜபக்சவுக்கும் நல்லது அல்ல. சஜித் மற்றும் ரணிலுடன் பேரம் பேசி ஆதரவை வழங்குவதற்காகவே நாமல் வேட்பாளராக பெயரிடப்பட்டுள்ளார் என நினைக்கின்றேன்.

சிலவேளை, நாமல் ராஜபக்ஷ போட்டியிட்டால்கூட அவருக்கு ஐந்தாவது இடம்தான் கிட்டும்.

முதல் இடம் ஜனாதிபதி ரணிலுக்கு, இரண்டாவது இடம் சஜித்துக்கு, மூன்றாவது இடம் அநுரவுக்கு கிடைக்கப் பெறும்." - எனவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

## பிரதமருக்கு...

கடிதம் ஒன்றை அனுப்பி முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்,

தற்போதைய பிரதமருக்கு ஆசீர்வாதம் வழங்குவதாகக் கூறி கதிரகாமம் கிரிவெஹரையில் இம்மாதம் 10 ஆம் திகதி விசேட பூசை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அதில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களை பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளதாகவும் எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

தேர்தல் காலப்பகுதியில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாகவும் உதவி தேர்தல் அதிகாரிகளாகவும் மாறுவதால், ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நடத்தப்படும் ஆசீர்வாத பூசையில் கலந்து கொள்வது சட்டப்படியும் நெறிமுறையாகவும் அமையாது என்பது எங்களது நம்பிக்கை.

இதேவேளை, தேர்தல் பணியில் சிறப்புப் பங்கு வகிக்கும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றால், அவர்கள் மீது, சமூகத்தில் சந்தேகம் எழுந்தால், தேர்தல் செயற்பாடுகள் பற்றிய நேர்மை கடுமையாக பாதிக்கப்படும்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் கீழ் பணிபுரியும் மற்ற அதிகாரிகளுக்கு மத்தியில் அவநம்பிக்கை ஏற்பட்டால், அதே நிலைமை தேர்தல் பணிக்கு தீங்கு விளைவிக்கும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பாரபட்சமில்லாமல் இருந்தால் மட்டும் போதாது, அதை உணரும் விதத்தில் நடக்க வேண்டும் என்பது தேர்தல் காலத்தில் வலியுறுத்தப்பட வேண்டிய தனிக் காரணி.

இந்தக் கண்ணோட்டத்தில், தேர்தல் பணியில் முக்கியப் பங்கு வகிக்கும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளை சிறப்பு ஆசீர்வாத பூசைக்கு அழைக்கக்கூடாது என்பது எங்களின் நம்பிக்கை, இது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்-என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக பகிரங்கமாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 8 இராஜாங்க அமைச்சர்கள் நாமல் ராஜபக்ஷவின் பக்கம்!

## பதவிகளை துறப்பதற்கு முடிவு

கொழும்பு, ஓக. 10

**ரணில் அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகிக்கும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் 8 பேர் தமது பதவிகளிலிருந்து விலக தயாராகி உள்ளதாக நம் பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.**

அதன்படி, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என அந்த 8 இராஜாங்க அமைச்சர்களும் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்காமல் இராஜாங்க அமைச்சுப் பதவிகளில் இருப்பது நல்லது அல்ல என அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலரும் கடந்த நாட்களில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் குறித்த இராஜாங்க அமைச்சர்களின் பதவிகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இதுவரை தீர்மானிக்கவில்லை என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க நேற்று முன்தினம் தீர்மானித்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தன்னுடைய தனிப்பட்ட காரணத்தினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு அறிவித்துள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலில் ஈடுபடும்போது தனிப்பட்ட தீர்மானங்களை முக்கியப்படுத்திக் கொள்ளவேண்டாம் என நாமல் ராஜபக்ச அதன்போது பவித்ரா வன்னியாராச்சியிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ)

# அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, ஓக. 10

சதொச நிறுவனம் சில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

அதன்படி 260 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கீரிச் சம்பா 248 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 9 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை 45 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ வெள்ளைப் பட்டாணியின் விலை 42 ரூபாவினாலும், இறக்குமதி செய்யப்படும் பச்சைப் பயறு, பச்சைப் பட்டாணி விலைகள் கிலோ 30 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இது தவிர, காய்ந்த மிளகாய், வெள்ளை அரிசி மற்றும் கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலையும் குறைக்கப்பட்டுள்ளன. (அ)

# வடபகுதி மீனவர்களை தன்வசமாக்க சீனா சதி!

## செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 10

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னையை பயன்படுத்தி வடக்கு மீனவர்களை தன்வசப்படுத்துவதற்கு சீன பல யுக்திகளை கையாண்டுவருகின்றது எனவும், இந்த நடவடிக்கையை கடுமையாக எதிர்க்கின்றோம் எனவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அத்துடன், சீனா இராணுவம் வடக்குக்கு வரவுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது எனவும், இதனையும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய செல்வம் எம்.பி., இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதும் நூற்றுக்கணக்கான ரோலர் படகுகள் வருகின்றன. இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது அது அநீதியான கைது எனக் கூறுபவர்கள், எமது மீனவர்களின் துன்பநிலை பற்றியும் புரிந்துகொள்ள வேண்டும். மீனவர் பிரச்னை சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

தமக்கு அநீதி இழைக்கப்பட்டால் இந்தியா தட்டிக் கேட்கும் என எமது மக்கள் நம்புகின்றனர், எனவே, மீனவர் பிரச்னையிலும் நியாயமான தீர்வு அவசியம் என்பது எமது கோரிக்கை.

மீனவர் பிரச்னையை அடிப்படையாக வைத்து எமது மீனவர்களை தன் வசப்படுத்துவதற்கு சீனா பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றது. இதனை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அதுமட்டுமல்ல சீன இராணுவம் எமது பகுதிக்கு வரவுள்ளது என்ற செய்தி வெளியாகியுள்ளது. எமது வடக்க, கிழக்கு மண்ணில் இலங்கை இராணுவத்தால் எமது மக்கள் ஏற்கனவே துன்பங்களை அனுபவித்துவிட்டனர். காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அரச திணைக்களங்கள் காணிகளை பிடிக்கின்றன. எமது பூர்வீகத்தை இல்லாது செய்யும் முயற்சியும் இடம்பெறுகின்றது. எமது வரலாற்று சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. துப்பாக்கிச்சத்தம் இல்லாவிட்டாலும் போர்ச் சூழலில்தான் எமது மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு இலங்கையின் முப்படைகளால் ஆக்கிரமிப்பைக்கொண்டுள்ள எமது வடக்கு, கிழக்குக்கு சீனாவின் இராணுவம் வர இருக்கின்றதாம், ஏன் வருகின்றார்கள் என தெரியவில்லை, இதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா? இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இதற்கு அனுமதி வழங்க முடியாது. எமது மீனவர்களை சீனா தன்வசப்படுத்தும் முயற்சியை அனுமதிக்க முடியாது - என்றார். (அ)

# தேர்தல் சட்டத்தை மீறும் அரச நிறுவனங்கள் விசாரணை நடத்த விசேட அதிகாரிகள் குழு!

கொழும்பு, ஓக. 10

தேர்தல் சட்டத்தை மீறும் அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை நடத்த விசேட அதிகாரிகள் குழுவை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் தேர்தல் சட்டங்களை மீறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அவற்றைத் தடுக்கக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், நிலைமையை ஆய்வு செய்து கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட குழுக்கள் அனுப்பப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்பட்டால் அதனை ஒப்படைக்குமாறு இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரச பதவிகளில் இருக்கும்போது அரசு வழங்கிய அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அந்த பதவிகளை விட்டு விலகிய பிறகு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாக பல முறைப்பாடுகள் வந்துள்ளன.

அவ்வாறே பயன்படுத்தப்பட்டால் உடனடியாக அவற்றை மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலிலிருந்து நீக்கப்பட்ட இரு சின்னங்கள்!

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும் இரு சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய சுயேச்சையான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும் நாய் மற்றும் பன்றிச் சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளன.

தர்மசங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் மத உணர்வை புண்படுத்தும் சின்னங்களை தேர்தல் ஆணைக்குழு நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# விலகினார் பொன்சேகா!

கொழும்பு, ஓக. 10

பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல இதனைத் தெரிவித்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளதுடன், அதற்கான கட்டுப்பணத்தையும் அவர் கடந்த 5ஆம் திகதி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய மீனவரின் அத்துமீறலை தடுப்பதில் தமிழக அரசு தொடர்ந்து மெத்தனப்போக்கு!

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

மன்னார், ஓக. 10

இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் விடயத்தில் தமிழக அரசு மெத்தனப்போக்குடன் செயற்படுவதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாக நாங்கள் தொடர்ந்தும் பேசி வருகிறோம். நேற்றைய தினம் 4 படகுகளில் 35 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மன்னார் தெற்கு கடல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். நாங்கள் தொடர்ச்சியாக முன் வைக்கின்ற கோரிக்கைகளை உதாசீனம் செய்கின்ற வகையில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய நடவடிக்கையும் அதனால் கைதும் இடம்பெறுகின்றது.

குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் இவ்வாறான அத்துமீறலும், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளையும் செய்யாதீர்கள். தற்காலத்திற்கு அதை நிறுத்தி வையுங்கள். நாங்கள் உங்களுடன் பேச விரும்புகின்றோம். அதற்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுவோம் என்று நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தாலும்,அந்தக் கோரிக்கையை இந்திய மீனவர்கள் உதாசீனம் செய்து வருகின்றனர்.

இந்திய மீனவர் இவ்வாறு உள்நுழைகின்றமையை நிறுத்திக்கொள்வதற்கு நாங்கள் எத்தனையோ நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

அரசுக்கு அழுத்தத்தை கொடுக்கின்றோம்.கடற்படைக்கும் அழுத்தத்தை கொடுக்கின்றோம்.

எனினும் அவர்களின் அத்து மீறிய வருகையை நிறுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். இவ்விடயத்தில் தமிழக அரசு அசமந்த போக்குடன் செயற்படுகின்றது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.